


**16.04.2024**

தலைப்புச் செய்திகள்

1. நாடுமுழுவதும் 102 மக்களவை தொகுதிகளுக்கு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் வாக்குப் பதிவிற்கான இறுதிகட்ட பிரச்சாரத்தில் அரசியல் தலைவர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

2. தமிழ்நாட்டில் நாளை மாலை 6 மணிக்கு மேல் எவ்வகையிலும் பரப்புரை மேற்கொள்ள கூடாது என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

3. மக்களவை தேர்தல் வாக்குப்பதிவிற்கான நடவடிக்கைகள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 2023 - 24ஆம் நிதியாண்டில், 776 பில்லியன் டாலரை எட்டும் என்று மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. IPL 20-20 கிரிக்கெட் போட்டியில் கொல்கத்தாவில் இன்றிரவு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

## தேர்தல்

தமிழகம் உட்பட நாடுமுழுவதும் 21 மாநிலங்கள் யூனியன் பிரதேசங்களின் 102 மக்களவை தொகுதிகளுக்கு வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் முதற்கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலை ஓய்வதால் அரசியல் கட்சித்தலைவர்கள் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பு பணிகளில் முழு முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

பீஹார் மாநிலம் கயாவில் இன்று தேர்தல் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி, கடந்த 10

ஆண்டுகளில், 25 கோடி ஏழை எளிய மக்கள் வறுமைகோட்டிலிருந்து மீட்கப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

மேற்குவங்க மாநிலத்தில் இன்று வாக்குசேகரிப்பில் அவர் ஈடுபடுகிறார்.

**காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை இந்தியாவின்** மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தும் வகையில் உள்ளது என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியலமைப்பை பி.ஜே.பி. மாற்ற முயல்வதாக குறை கூறினார்.

**வடசென்னையில் இன்று வாக்கு** சேகரித்த **திமுக தலைவரும் முதலமைச்சருமான** திரு.மு.க.ஸ்டாலின், நாட்டின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று கோரியுள்ளார்.

பி.ஜே.பி அரசு கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்திற்கு நிதி சுமையை ஏற்படுத்தி உள்ளதாக குற்றம் சாட்டினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் இன்று அவர் பரப்புரையில் ஈடுபடுகிறார்.

**அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி** கே.பழனிச்சாமி, வரும் தேர்தலில் பி.ஜே.பிக்கு உரிய பாடம் புகட்ட வேண்டும் என்று கூறியுள்ளார். தேர்தல் களம் அஇஅதிமுக-விற்கு சாதகமாக இருப்பதாக கூறினார்.

இன்று சேலத்தில் வாக்குகள் சேகரிக்கிறார்.

**கோவை சூலூர் பகுதியில் இன்று பிரச்சாரம்** மேற்கொண்ட பி.ஜே.பி. மாநில தலைவர் திரு. அண்ணாமலை, இத்தேர்தல் நாட்டை ஆளக்கூடிய பிரதமரை தேர்ந்தெடுக்கும் தேர்தல் என்பதை மக்கள் மனதில் கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

**தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.** செல்வபெருந்தகை ஸ்ரீபெரும்புதூரில் காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வாக்குகள் இன்று கோருகிறார்.

**பி.ஜே.பி. தேசிய தலைவர் திரு. ஜே.பி.நட்டா** ராமநாதபுரத்திலும் மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன் மேட்டுப்பாளையத்திலும் இன்று வாக்குகளை திரட்டினர்

பிரச்சாரம் முடிவடைய நாளை ஒருநாள் மட்டுமே எஞ்சியுள்ள நிலையில் இறுதிகட்ட வாக்குச் சேகரிப்பில் வேட்பாளர்களும், அரசியல் கட்சியினரும் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.

வீடுவீடாக சென்று தத்தம் கட்சிகளுக்கு வாக்களிக்கும் படி ஆதரவு கோரி வருகின்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**சத்யபிரத சாகு**

தமிழ்நாட்டில் நாளை மாலை 6 மணிக்கு பிரச்சாரம் ஓய்ந்த பின்னர் சமூக வலைதளங்கள் உட்பட எவ்வகையிலும் தேர்தல் பரப்புரை மேற்கொள்ள கூடாது என்று மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு. சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இதனை தெரிவித்த அவர், மாலை 6 மணிக்கு மேல் வெளியூர் நபர்கள் வெளியேற வேண்டும் என்றும், மாவட்ட நிர்வாகம் அதனை உறுதி செய்திட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

வரும் வெள்ளிக்கிழமை மக்களவை தேர்தல் மற்றும் விளவங்கோடு இடைத்தேர்தல் வாக்குப்பதிவு காலை 7 மணி தொடங்கி மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும் என்றார்.

மாநிலத்தில் நேற்றுவரை 85 வயதிற்கு மேற்பட்ட 66 ஆயிரத்து 461 பேர் தபால் வாக்குகளை செலுத்தி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தபால் வாக்குகளை இன்று மாலை 5 மணிவரை செலுத்தலாம் என்றும் தெரிவித்தார்.

காஞ்சிபுரத்தில் பறக்கும் படையினரால் பிடிக்கப்பட்ட ஆயிரத்து 425 கிலோ தங்கம் திருப்பி வழங்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், முறையான ஆவணங்கள் வருமான வரித்துறையிடம் அளித்ததால் இவை விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வாக்காளர்கள் ஏதேனும் புகார் தெரிவிக்க விரும்பினால் 1950 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள அரசு அலுவலர்களுக்கான 4-வது கட்ட பயிற்சி வகுப்புகள் நாளைமறுநாள் நடைபெற உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

**தேர்தல் மாவட்டங்கள்**

**தமிழ்நாட்டில் மக்களவை தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து** நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

**பெரம்பலூர் மாவட்டத்தில்** வாக்குப்பதிவு முன்னேற்பாட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கற்பகம் ஆய்வு மேற்கொண்டார்.

**மதுரை மாவட்டத்தில் தேர்தலுக்கு முந்தைய** கண்காணிப்பு ஆய்வுக் கூட்டம் சிறப்பு தேர்தல் செலவின மேற்பார்வையாளர் திரு. பி.ஆர். பாலகிருஷ்ணன் தலைமையில் இன்று நடைபெற்றது.

மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி. சங்கீதா உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**தூத்துக்குடி மக்களவை தொகுதியில் தேர்தல்** அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சியை ஆட்சித்தலைவர் திரு. லட்சுமிபதி இன்று ஆய்வுசெய்தார்.

❖❖❖❖❖❖❖❖

**நாமக்கல்**

**நாமக்கல் மாவட்டத்தில்** 100 **சதவிகித** வாக்களிப்பிற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மாவட்ட தேர்தல் அலுவலர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

**முதல்முறை வாக்காளர்கள்**

**திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த** 18 **வயது** பூர்த்தியடைந்த முதல்முறை வாக்காளர்கள் தேர்தலில் வாக்களிக்க ஆர்வமுடன் இருப்பதாக தெரிவிக்கின்றனர்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖❖

**வர்த்தக அமைச்சகம்**

**நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதி விகிதம்** 2023 - 24**ஆம்** நிதியாண்டில், 776 பில்லியன் டாலரை எட்டும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் அதிகமாகும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

அதேபோல் நாட்டின் ஒட்டுமொத்த இறக்குமதி 854.8 பில்லியன் டாலராக இருக்கும் என்று கூறியுள்ள அமைச்சகம், அதற்கு முந்தைய ஆண்டை காட்டிலும் இது 4.81 சதவிகிதம் குறைவாகும் என்று தெரிவித்துள்ளது.

ஒட்டுமொத்த வர்த்தக பற்றாக்குறை 35.77 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும் அமைச்சகம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**வெங்காயம்**

இலங்கைக்கு 10 ஆயிரம் டன் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அதேபோல் ஐக்கிய அரபு அமீரகத்திற்கு கூடுதலாக 10 ஆயிரம் டன் வெங்காய ஏற்றுமதிக்கும் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுதொடர்பாக அறிவிக்கை வெளியிட்டுள்ள வெளிநாடு வர்த்தக இயக்குநரகம், ஐக்கிய அரபு அமீரகத்திற்கு ஏற்கனவே 24 ஆயிரத்து 400 டன் வெங்காயம் விடுவிக்கப்பட்டிருந்ததாக கூறியுள்ளது.

தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனத்தின் மூலம் வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாக வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**உயர்நீதிமன்றம்**

சட்டமன்ற நிகழ்வுகளை நேரடியாக ஒளிபரப்பு செய்வது தொடர்பாக பல்வேறு மாநிலங்களிடமிருந்து முழுமையான தகவல்கள் கிடைத்த பின்னர் உரிய முடிவெடுக்கப்படும் என்று தமிழக அரசு, சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி கங்கா பூர்வாலா தலைமையிலான அமர்வு வழக்கு விசாரணையை வரும் ஜூன் 25-ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

❖❖❖❖❖❖❖❖

**படகு இல்லம்**

**நீலகிரி மாவட்டம்** பைகாரா படகு இல்லத்திற்கு செல்லும் சாலைகளில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் போக்குவரத்திற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**கோவில்**

**திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன்** திருக்கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது

லட்சக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரை வடம் பிடித்து இழுத்து வருகின்றனர்.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தேர் திருவிழாவை ஒட்டி மாவட்டத்திற்கு இன்று உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

**திருவாரூர் மாவட்டம் வடுவூர் கோதண்டராமர்** திருக்கோவில் ஸ்ரீராமநவமி பெருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது

முக்கிய நிகழ்ச்சிகளான கருட சேவை வரும் வெள்ளிக்கிழமையும், திருத்தேரோட்டம் வரும் 24-ம் தேதியும் நடைபெற உள்ளன.

**காஞ்சிபுரம் அருள்மிகு கச்சபேஸ்வரர்** திருக்கோவில் சித்திரை பிரம்மோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நிகழ்ச்சியான திருத்தேரோட்டம் வரும் 22-ம் தேதி நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖❖❖

**கிரிக்கெட்**

**ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில்** கொல்கத்தாவில் இன்றிரவு ஏழரை மணிக்கு கொல்கத்தா நைட்ரைடர்ஸ் - ராஜஸ்தான் ராயல்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖

**,j;Jld; ,e;j nra;jpawpf;if Kbtile;jJ.**